அடையாள இலக்கம்:

C ☐☐☐☐☐☐

அகில அவுஸ்திரேலியா, நியூசிலாந்து
தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் - 2016

அவுஸ்திரேலிய பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition – Australian Society of Graduate Tamils

## எழுத்தறிவுப் போட்டி

## மேற் பிரிவு

(10 – 11 வயதுப் பிரிவு)

நேரம்: 1 மணித்தியாலம் 30 நிமிடங்கள்

பரீட்சைத் தாளை வாசிக்க மேலதிகமாகப் 10 நிமிடங்கள் வழங்கப்படும்.

| மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

**(அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எடுதுக.** புள்ளிகள்: 5

1. பூப்பூத்தது ______________ + ______________
2. ஏழாயிரம் ______________ + ______________
3. வானொலி ______________ + ______________
4. கிளிக்கூடு ______________ + ______________
5. தேடிச்சென்றான் ______________ + ______________

**(ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எடுதுக.** புள்ளிகள்: 5

1. தலை + கவசம் = ______________
2. பணம் + பை = ______________
3. வடக்கு + கிழக்கு = ______________
4. உடல் + உறுப்புகள் = ______________
5. மரம் + வேர் = ______________

**(இ) பின்வரும் சொற்களுக்கு எதிர்ப் பொருள் கொண்ட சொற்களை எழுதுக.**
புள்ளிகள்: 5

1) பகல் ______________
2) புதியது ______________
3) குழப்பம் ______________
4) நீதி ______________
5) ஏற்றுமதி ______________

**(ஈ) பின்வரும் சொற்களின் உயர்திணைப் பெண்பாற் சொற்களை எழுதுக.**

புள்ளிகள்: 5

1) நல்லவன் ______________
2) அரசன் ______________
3) நடிகன் ______________
4) ஒருவன் ______________
5) மாணவன் ______________

**(உ) அடைப்புக் குறிக்குள் இருந்து பொருத்தமான சொற்களைத் தேர்ந்தெடுத்துக் கீழே தரப்பட்ட வசனங்களிற் காணப்படும் கோடிட்ட இடங்களை நிரப்புக.**

புள்ளிகள்: 10

1) கடலில் _______________ ஒருபோதும் ஓய்வதில்லை.
(அலை, அழை)

2) நான் _______________ நேரம் கடவுளை வணங்குவேன்.
(காலை, காளை)

3) நான் படிக்கும் _______________ எனது வீட்டிற்கு அருகில் உள்ளது.
(பல்லி, பள்ளி)

4) சேந்தன் _______________ வியாதியால் நிறம் மாறிவிட்டான்.
(தோல், தோள்)

5) கலாவுக்கு _______________ வலி ஏற்பட்டது.
(தலை, தழை)

6) தினமும் _______________ உண்பது உடலுக்கு நல்லது.
(பழம், பலம்)

7) சிறுவர்கள் ஓடி விளையாடியதால் _______________ விட்டார்கள்.
(கழைத்து, களைத்து)

8) திராட்சை மரத்திலே பழங்கள் _______________ தொங்குகின்றன.
(குழை குழையாகத், குலை குலையாகத்)

9) _______________ கறுத்தால் மழை பெய்யும் என்பர்.
(வானம், வாணம்)

10) எனது வீட்டில் என்னுடைய _______________ மிகவும் பெரியது.
(அரை, அறை)

**(ஊ) கீழே தரப்பட்ட சொற்களுக்கு அவற்றின் பொருள் விளங்கும்படி வாக்கியங்கள் எழுதுக.** புள்ளிகள்: 20

1. சந்திரன்: ______________________________

   ______________________________

2. கண்ணாடி: ______________________________

   ______________________________

3. விஞ்ஞானிகள்: ______________________________

   ______________________________

4. கம்பராமாயணம்: ______________________________

   ______________________________

5. உடல் நலம்: ______________________________

   ______________________________

6. மலர்க்கண்காட்சி: ______________________________

   ______________________________

7. பாரதியார்: ______________________________

   ______________________________

8. தமிழ் மொழி: ______________________________

   ______________________________

9. பாடம்: ______________________________

   ______________________________

10. மாணவர்கள்: ______________________________

   ______________________________

**(எ) கோடிட்ட இடங்களிலே பொருத்தமான சொற்களைப் பாவித்துக் கீழே தரப்பட்ட வாக்கியங்களைப் பூர்த்தி செய்க:** புள்ளிகள்: 20

1. அவுஸ்திரேலியாவிற் கோடை காலத்திலே காடுகள் ______________ எரிவது உண்டு.
2. வீணை தமிழர்களது ஒரு ________________________ ஆகும்.
3. தெனாலிராமன் கதைகள், வாசிப்பவர்களைச் சிரிக்கவும் ___________ வைக்கின்றன.
4. _________________ பெயர்ந்த தமிழர்கள் தமது கலாசாரத்தைக் கட்டிக்காக்க அரும்பாடுபடுகின்றனர்.
5. சமூக நூல் நிலையங்களில் தமிழ்ப்புத்தகங்களை எடுத்து நாம் படிக்காவிட்டால், அவர்கள் நூல் வாங்குவதை _________________ விடுவார்கள்.
6. மகாபாரதமும் இராமாயணமும் _________________ என்று அழைக்கப்படுகின்றன.
7. குதிரையின் மீது ஏறிச் _________________ செய்வதைச் சிறுவர்கள் விரும்புகின்றனர்.
8. தமிழ்ச்சொற்களின் பொருள்களை அறிவதற்குத் தமிழ் ________________ துணையாக இருக்கின்றது.
9. மழை பெய்யும்போது நனையாதிருக்க நாம் _________________ பிடிக்கின்றோம்.
10. ___________________ ஏழு நிறங்களைக் காணலாம்.

(ஏ) **கீழே தரப்பட்ட சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களாற் பந்தியில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.** புள்ளிகள்: 10

| | | |
|---|---|---|
| **துக்கம்** | **மரங்கள்** | **பொறாமைப்** |
| **பயன்படாது** | **தேவையில்லை** | **மரம் வெட்டுபவர்கள்** |
| **காப்பாற்றியது** | **கோடரியால்** | **அழகாக** |
| **எல்லா மரங்களும்** | | |

ஒரு காட்டில் பல மரங்கள் காணப்பட்டன. அவற்றுள் ஒரே ஒரு மரத்தைத் தவிர மற்றைய ______________________ நேராகவும் உயரமாகவும் வளர்ந்திருந்தன. ஒரு மரம் மட்டும் வளைந்து வளைந்து வளர்ந்து குட்டையாகக் காட்சியளித்தது. அது மற்றைய மரங்களைப் பார்த்துப் ______________________ பட்டது.

“இந்தக் காட்டிலே ______________________ நேராக உயரமாக வளர்ந்துள்ளன. பார்ப்பதற்கு எவ்வளவு ______________________ உள்ளன. நான் மட்டும்தான் வளைந்து வளைந்து வளர்ந்து, குட்டையாக உள்ளேன்” என்று நினைத்துத் ______________________ அடைந்தது.

ஒருநாள் ______________________ பலர் அந்தக் காட்டிற்குள் நுழைந்தார்கள் அங்கிருந்த மரங்களில் உயரமானவற்றை ______________________ வெட்டி வீழ்த்தினார்கள். நேராக உயர்ந்து வளர்ந்திருந்த எல்லா மரங்களும் சாய்ந்தன.

குட்டையாக வளைந்திருந்த மரத்தின் அருகே சிலர் வந்தனர். “இந்த மரம் ______________________ இதை வெட்டினால் நமக்கு நேரான பலகை எதுவும் கிடைக்காது. இது எமக்குத் ______________________” என்று ஒருவன் சொன்னான். எல்லோரும் அங்கிருந்து வெட்டிய மரங்களுடன் சென்றார்கள். தன் குட்டையான தோற்றமே தன்னைக் ______________________ என்று மகிழ்ந்தது அந்த மரம்.

**(ஐ) கீழே தரப்பட்ட கவிதையைப் படித்த பின்னர் கேட்கப்பட்ட கேள்விகளுக்குத் தகுந்த விடைகளைத் தருக.** புள்ளிகள்: 20

தேனி ருக்கும் இடத்தினைத்
தேடி மொய்க்கும் வண்டு போல்
சீனி உள்ள இடத்தினைத்
தேடி ஊரும் எறும்பு போல்
பழம் நிறைந்த சோலையைப்
பார்த்துச் செல்லும் கிளியே போல்
வளம் நிறைந்த நாட்டிலே
வந்து சேரும் மக்கள் போல்
பள்ளமான இடத்தினைப்
பார்த்துப் பாயும் வெள்ளம் போல்
நல்ல நல்ல நூல்களை
நாடி நாமும் பயிலுவோம்

- அழ வள்ளியப்பா

**<u>கேள்விகள்:</u>**

1) வண்டு என்ன செய்கிறது?

------------------------------------------------------------

------------------------------------------------------------

2) மக்கள் எங்கே செல்கிறார்கள்?

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

3) இப்பாடல் புகட்டும் போதனை என்ன?

------------------------------------------------------------

------------------------------------------------------------

4) நாம் செய்ய வேண்டியதை வலியுறுத்த பாடலாசிரியர் எத்தனை உதாரணங்களைக் கூறுகின்றார்? அவை எவை?

5) நல்ல நூல்களை எதற்காகப் படிக்க வேண்டும் என்பது பற்றிய உங்கள் கருத்தை எழுதுக?